**நீர் ஆரோக்கியம் மற்றும் சுகாதாரத்தை வலுப்படுத்தல் செயற்திட்டம் - 2018**

-----------------------------------------------------------------------------------------------------------------------------------------------

நீர் ஆரோக்கியம் மற்றும் சுகாதாரத்தை வலுப்படுத்தல் செயற்திட்டத்தின் 2018 சனவரி 01 இலிருந்து 2018 திசெம்பர் 16 வரையான காலப்பகுதிக்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் சார்க் அபிவிருத்தி நிதியத்திற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2014 திசெம்பர் 17 ஆந் திகதிய செயற்திட்ட நிதியளித்தல் உடன்படிக்கையின் 3.3 ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டிருந்தது. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

நிதியளித்தல் உடன்படிக்கையின் பிரகாரம் விவசாய அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்று முகவராக உள்ளதுடன் விவசாய அபிவிருத்தி திணைக்களம் செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராகும். மட்டக்களப்பு மற்றும் மொனராகலை மாவட்டங்களில் 2800 குடும்பங்கள் நலன்பெறுகின்ற 09 கிராமங்களில் நீருக்காக கிராமிய நீர்ப்பாசன முறைமையில் தங்கியிருக்கும் கிராமிய சமூகங்களின் வாழ்க்கைத் தரத்தின் நிலைபேறான மேம்பாட்டை உறுதிப்படுத்துதல் மற்றும் நீர்ப்பாசனத் திட்டங்கள் மற்றும் ஆற்றுப் பள்ளத்தாக்குகளின் நீர் மூல முகாமைத்துவத்தின் நீர்ப் பயன்பாட்டுச் செயல்திறனை மேம்படுத்துதல் செயற்திட்டத்தின் குறிக்கோள்களாகும். நிதியளித்தல் உடன்படிக்கையின் பிரகாரம் செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 119 மில்லியனுக்குச் சமமான யுஎஸ்டொலர் 0.94 மில்லியனாக இருந்ததுடன் அனைத்து பணமும் சார்க் அபிவிருத்தி நிதியத்தால் நிதியளிப்பதற்கு உடன்பாடு செய்யப்பட்டிருந்தது. செயற்திட்டம் அதனது நடவடிக்கைகளை 2014 திசெம்பர் 17 ஆந் திகதி ஆரம்பித்திருந்ததுடன் 2017 திசெம்பர் 16 ஆந் திகதியளவில் பூர்த்தி செய்வதற்கு பட்டியல்படுத்தப்பட்டிருந்தது. பின்னர் செயற்திட்ட காலம் 2018 திசெம்பர் 16 ஆந் திகதி வரையும் நீடிக்கப்பட்டிருந்தது.

## 1.3 அபிப்பிராயம்

இணைக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களானது 2018 திசெம்பர் 16 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த காலப்பகுதிக்கான நிதிசார் செயலாற்றலினையும் பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்கனுக்கான முகாமைத்துவத்தினதும் நல்ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட

நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

**1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு செயற்திட்டத்தின் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், உள்ளக கட்டுப்பாட்டிலான முக்கியமான குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் முகாமைத்துவத்திற்கு அறிவிக்கப்பட்டது.

## 2. பௌதீக செயலாற்றல்

### 2.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக செயல் முன்னேற்றம்

செயற்திட்டத்தின் வேலைத்திட்டங்களின் கீழ் செயற்திட்டத்தினால் மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள வாகரை, தொப்பிகல, மற்றும் களுவாஞ்சிக்குடி கிராமங்களினதும் மொனராகலை மாவட்டத்திலுள்ள செல்லக்கதிர்காமம், கஹகுருல்லன்பெலஸ்ஸ, கிம்புல்கெம, கந்தசுரிந்துகம ஆகிய கிராமங்களினதும் சுகாதார நிலையை உறுதிப்படுத்துவதற்காக ஆற்றுப்பள்ளத்தாக்கு முகாமைத்துவம், காணிப் பயன்பாட்டினைத் திட்டமிடல், நீர் மூலம் உருவாகின்ற நோய்களைக் குறைத்தல், ஆரோக்கிய மற்றும் சுகாதார வசதிகளின் தரத்தை உறுதிப்படுத்துவதற்கு முன்னேற்றகரமான தொழில் நுட்பங்களைப் பின்பற்றுதல், விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல் முதலியவாறான மேம்பாட்டு வேலைகள் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பூர்த்தி செய்யப்பட்டிருந்தன. எனினும், செயற்திட்டத்தினால் 2016 இல் ஆரம்பிக்கப்பட்ட மொனராகலை மாவட்டத்திலுள்ள இந்திபலஸ்ஸ குளம், கிரிகட்டுவா குளம், குகுல்கட்டுவா குளம் என்பவற்றின் புனரமைப்பு வேலைகள் 2019 செப்தெம்பர் 10 ஆந் திகதி வரையும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.